## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.98/2014

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பரஞ்சோதி | மதம் | : இந்து |
| த/பெ | : சரவணன் அ. முருகேசன் | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : அம்மையார்குப்பம் |
| தொழில் | : ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**17.10.2025**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டுட 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி எனக்கு என்ன உறவு என்றால் என் சொந்த அண்ணன் ஆவார். சரவணன் அ. முருகேசன் என்பவரின் வாரிசுதான் நான் என்பதை காட்ட ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தை என் அப்பா எந்த வருடம், மாதம், தேதி வாங்கினார் என்பது தெரியுமா என்றால் ஆகஸ்ட் மாதம் 1981ல் வாங்கினார். தேதி நினைவில் இல்லை. என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தின் புல எண், மனை எண் தெரியுமா என்றால் புல எண்.94/1 ஆகும். மனை எண் ஞாபகமில்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 20க்கு 70 ஆகும்.

2. மொத்த சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கை சச்சிதாநந்தம் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பேர் ஆவோம். 1. சச்சிதாநந்தம், 2.சகுந்தலா, 3. பரஞ்சோதி, 4. தேவகி ஆவோம். அவ்வாறு 4 வாரிசுகள் இருக்கும்போது சச்சிதாநந்தத்திற்கு மட்டும் வழக்கு சொத்து சொந்தம் என்று என் அப்பா ஏதேனும் ஆவணம் எழுதி வைத்துள்ளாரா என்றால் ஆவணம் இல்லை. பெரியோர்கள் முடிவு செய்து இந்த சொத்து சச்சிதாநந்தத்திற்கு என்று கொடுத்துவிட்டார்கள். வாய்

மொழியாக சொன்னார்களா எழுத்து மூலமாக எழுதினார்களா என்றால் வாய்மொழியாகதான் சொன்னார்கள்.

3. சச்சிதாநந்தம் பட்டா மாற்றியுள்ளாரா என்றால் பட்டா மாற்றவில்லை. சச்சிதாநந்தம் என்ன பரிகாரம் கேட்டு பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து தனக்கு சொந்தம் என பிரபவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். 3ம் மனையை என் அப்பா கிரையம் வாங்கியதில் 3, 4 மனைகளுக்கு இடையே பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை என் அப்பா கிரையம் வாங்கியுள்ளதில் எழுத்து மூல ஆவணம் இல்லாத நிலையில் என் அப்பாவின் நான்கு வாரிசுகளும் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சச்சிதாநந்தம் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களது நிலத்தைதான் கேட்கிறார்கள் என்றாலும் என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தை கேட்கவில்லை என்றால் என் அப்பா பெயரில்தான் பத்திரம் உள்ளது.

(மறு விசாரணை இல்லை)